# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(தேசிய மதிப்பீட்டுத் தரநிர்ணயக் குழுவின் மதிப்பீட்டில் "A+" தரச் சான்றிதழ் மூன்றாம் சுற்றில் பெற்றது)

**பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024.**


| | | |
|---|---|---|
| | அலுவலகம் : | 0431-2407016, 2407060 |
| முனைவர் சு. ஸ்ரீனிவாசராகவன் , எம்.ஏ.,எம்.எல்.ஐ.எஸ்.சி., பி.எச்.டி., | மின் அஞ்சல் : | coe@bdu.ac.in |
| தேர்வு நெறியாளர் (பொ.) | வலைத்தளம் : | www.bdu.ac.in |


---

ந.க.எண்: 102/A3/தே.நெ.அ./ம.பி.2/நவம்பர் 2021 — நாள்: 11.12.2021

**பெறுநர்:**

**கல்லூரி முதல்வர்**
**பாரதிதாசன் பல்கலைக்கழக தன்னாட்சி அல்லாத இணைவு பெற்ற கல்லூரிகள்**

அன்புடையீர்,

பொருள்: நவம்பர் 2021 பருவத்தேர்வு - தொழில்முறை ஆங்கிலம் (Professional English) கற்பிக்கப்படும் ஆசிரியர் பெயர்ப்பட்டியல் கோருதல் - தொடர்பாக.

-------

பாரதிதாசன் பல்கலைக்கழக இணையதளத்தில் http://www.bdu.ac.in/examinations/profeng.php என்கிற இணைப்பில் காணப்பெறும் படிவத்தை பதிவிறக்கம் செய்து அதில் நவம்பர் 2021 பருவத்திற்கு தங்கள் கல்லூரியில் கீழே குறிப்பிட்டுள்ள **தொழில்முறை ஆங்கிலம் (Professional English) தாள்களுக்கு, தாள்வாரியாக** கற்பிக்கும் ஆசிரியர்களின் பெயர்களைப் பூர்த்தி செய்து **22.12.2021-க்குள்** அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1. **Professional English for Physical Sciences**
2. **Professional English for Life Sciences**
3. **Professional English for Arts & Social Sciences**
4. **Professional English for Commerce & Management**

படிவங்களைப் பூர்த்தி செய்யும் முன் கீழ்க்காணும் விவரங்களின் மீது தனிக்கவனம் செலுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1. **தொழில்முறை ஆங்கிலம் (Professional English) தாள்வாரியாக** கற்பிக்கும் ஆசிரியர்களின் பெயர்களை மட்டும் அவர்களின் பணிமூப்பு (Seniority) அடிப்படையில் பட்டியலிடவும். பல்கலைக்கழகத் தேர்வாளர் பட்டியலில் இல்லாத ஆசிரியர்களின் பெயர்களைக் கண்டிப்பாக பரிந்துரைக்க வேண்டாம்.

2. மாற்றுப் படிவங்களை உபயோகிக்க வேண்டாம்.

3. பல்கலைக்கழக இணைய தளத்திலிருந்து http://www.bdu.ac.in/examinations/profeng.php பதிவிறக்கம் செய்யப்பட்ட MS-EXCEL FORMAT-ல் பூர்த்தி செய்து confidential2@bdu.ac.in என்கிற மின்னஞ்சல் முகவரிக்கு **22.12.2021-க்குள்** அனுப்பி வைக்கவும். பதிவிறக்கம் செய்யப்படாத **MS-EXCEL FORMAT-ல் பெறப்படும் மென் நகலினை (Soft Copy) ஏற்றுக் கொள்ள இயலாது.** மேலும் மின்னஞ்சலுக்கு அனுப்பும் படிவத்தின் நகல் ஒன்றினை கல்லூரி முதல்வரின் கையொப்பமிட்டு அஞ்சல் வழியாக தேர்வு நெறியாளர் அலுவலகத்திற்கு **22.12.2021-க்குள்** அனுப்பி வைக்கவும். மேற்குறிப்பிட்டவாறு அனுப்பி வைக்கப்படாத பட்டியல்கள்.'.காலந்தாழ்ந்து கிடைக்கப்பெறும் பட்டியல்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. **MS-EXCEL FORMAT தவிர .jpg, .pdf, .doc இந்த வடிவத்தில் பெறப்படும் மின்னஞ்சல் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

தேர்வு முடிவுகளை விரைவாக அறிவிக்க ஏதுவாக தங்களது ஒத்துழைப்பினை நல்கி இக்கடிதத்தின் மீது தனிக்கவனம் செலுத்தி உதவுமாறு அனைத்துக் கல்லூரி முதல்வர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**-Sd-**

**தேர்வு நெறியாளர்(பொ.)**